4 நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) வெட்டுத் தீர்மானங்களுக்கு உரிய மதிப்பளித்து அமைச்சர்கள் விடையளித்தல்.

Dr. H. V. HANDE : Sir, I rise on a point of order before the cut motions are moved. The cut motions contain the essence of the problems of the members in their constituencies. I request the Chair to give instruction to the Ministers to see that these cut motions are properly circulated among the departmental heads.

(Mr. Speaker rang the bell.)

Give me a chance to explain. These departmental heads must prepare the answers and immediately pass them on to the Ministers and the Ministers must make it a point to answer the points raised. Budget is the only opportunity we get once in a year. Normally cut motions are treated with scant courtesy and respect by the departmental heads as well as the Ministers. In order to see that the cut motions are not treated with scant courtesy, may I know whether the Speaker will give instruction to the Ministers, pull them up and see.....................

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகின்ற கருத்து முற்றிலும் தவறு. வெட்டுத் தீர்மானங்கள் இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டு அமைச்சர்களுக்கு குறிப்பு வருகிறது. அதை வைத்துக் கொண்டு பேசுகிறோம் அப்பொழுது எழுந்து கேட்டால் கூட பதில் சொல்லுகிறோம். எனவே, இலாக்காக்களுக்கு அனுப்பப்படவில்லை, பரிசீலிக்கப்படவில்லை என்று சொல்வது தவறு. இன்னும் விவரம் வேண்டுமென்று எழுந்து கேட்டால் பதில் சொல்லத் தயாராகயிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹண்டே அவர்களுக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், எந்த நேரத்தில் எதைப்பற்றி பேசுவது என்று முறை இருக்கிறது. இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் வராதே. உங்களுக்குக் குறைகள் இருந்தால் குறைகளைப்பற்றிக் கேட்பதற்கு முறை இருக்கிறது. அந்த முறைப்படி கேட்கலாம். எந்த நேரத்திலும் எதை வேண்டுமானாலும், எந்த அடிப்படையில் வேண்டுமானாலும் கூறுவது முறையல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

Dr. H. V. HANDE : This is a very important point.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவோ இருக்கலாம். எவ்வளவு முக்கியமான பொருளாக இருந்தாலும் அதைக் கேட்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த முறைப்படி கேட்கலாம். கேட்க வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்கு வேறு நேரமிருக்கிறது.

5. 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

Thiru R. PONNAPPA NADAR : Sir, to discuss policy I move—

"That the allotment of Rs. 20,14,000 under Demand No. 22—Khadi—be reduced by Rs. 100".

Dr. H. V. HANDE : Sir, to discuss policy and to point out the need to redress the grievances of the employees working under the